**சார்பு நீதிமன்றம், திருவாரூர்.**

முன்னிலை திரு.G.கிருஷ்ணன், B.A., L.L.B.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.136/2017**

வாதி தரப்பு சாட்சி வா.சா. 1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. S. ஷர்மிளா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திருமதி. மங்களம் | த/பெ: | |
| | | க/பெ :கோபால் | |
| வயது: | 70 | ஊர் : | |
| தொழில்: | | அலைபேசி எண்: | |
| தேதி: | 12.08.2024 | முகவரி: | |

முதல் விசாரணை...

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்து என்னால் உண்மை என சொல்லப்பட்டவை தான். அதனால் நான் தாக்கல் செய்துள்ள முதல்நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு வாதி தாக்கல் செய்த முதல்நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் வா.சா.1ன் முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகின்றது.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | 17.10.2016 | எனக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரம் | அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 23.01.1970 | நான் தாவா ஏ அட்டவணை சொத்தை கிரயம் பெற்றதற்கான கிரய சாசனம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.2 |
| 3 | 17.08.1981 | நான் தாவா ஏ அட்டவணை சொத்தை பரிவர்த்தனை மூலம் பெற்றதற்கான பரிவர்த்தனைபத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.3 |
| 4 | 17.08.1981 | தாவா ஏ அட்டவணை சொத்தில் 5 குழியை மட்டும் நான் 2 ஆம் பிரதிவாதிக்கு கிரயம் செய்துக்கொடுத்ததற்கான கிரய சாசனம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.4 |
| 5 | 13.09.2017 | நான் எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் | வா.சா.ஆ-5 |
| 6 | 25.09.2017 | மேற்படி சட்ட அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு அனுப்பிய பதில் சட்ட அறிவிப்பு | அசல் | வா.சா.ஆ.6 |
| 7 | 07.06.2010 | முதலாம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் கோவிந்தராஜ் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.7 |
| 8 | 07.06.2010 | முதலாம் பிரதிவாதிக்கு 2 ஆம் பிரதிவாதி செய்துக்கொடுத்த கிரய சாசனம் | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.8 |
| 9 | -- | வழக்கு சொத்துக்களின் அரசு வழிகாட்டுதல் மதிப்பீடு | இணைவழி சான்று நகல் | வா.சா.ஆ.9 |

தாவாபடி தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை - வேண்டுகோளுக்கிணங்க வரும் 19.08.2024 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம். G.கிருஷ்ணன்,

சார்புநீதிபதி,

திருவாரூர்